# தேசிய ஆராய்ச்சி சபை – 2012

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய ஆராய்ச்சி சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ஆராய்ச்சி சபைக்காக முன் வாடகைக்கு பெறப்பட்ட கட்டிடத்திற்காகச் செய்யப்பட்ட ரூபா 90,000 தொகையான வைப்பினை மீளப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அக் கட்டிடத்திற்காகச் செலுத்த வேண்டிய தொலைபேசி, மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களுக்கான ரூபா 24,143 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்கானமைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவு | 2011 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை |

| | |
|---|---|
| (ஆ) 2007 செப்தெம்பர் 15 ஆம் திகதிய 1514/28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | வெற்றிகரமான ஆராய்ச்சி மற்றும் நவீனமயப்படுத்தலுக்காக வருடாந்த சனாதிபதி விருது வழங்கல் 2007 ஆண்டு முதல் நடாத்தப்படாதிருந்த போதிலும் அதற்காக ரூபா 971,944 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (இ) நிதிப் பிரமாணம் 154 | ஆராய்ச்சிச் சபையின் உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் வழங்கப்பட்டுள்ள மடிக் கணனிகள் மற்றும் கையடக்க தொலைபேசிகளுக்கான பகிர்ந்தளித்தல் பட்டியல் தனித்தனியாக வைக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 (இ) பந்தி | எதிர்வரும் வருடத்திற்காக கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சுமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 அந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 21,470,618 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 18,148,802 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 3,321,816 வீழ்ச்சியினைக் காணக்கூடியதாக இருந்தது. மொத்த வருமானம் ரூபா 32 மில்லியனால் அதிகரித்தற்கு ஒப்பீடாக மொத்தச் செலவினம் ரூபா 35 மில்லியனால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 பௌதீக செயலாற்றல்

2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பௌதீக செயலாற்றல் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| ஆராய்ச்சி மானியம் | | | |
| விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல் | 152 | 199 | 74 |
| மானியம் வழங்கல் | 58 | 51 | 19 |
| தத்துவவியல் முதுமாணி/ Mphil மாணவர்கள் | 67 | 67 | 06 |
| சனாதிபதி விருது விழாவை நடாத்துதல் | 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகளுக்கான விருதுகளுக்காக ஆராய்ச்சியாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல் | 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகளுக்கான விருதுகளுக்காக ஆராய்ச்சியாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் | 2003, 2004, 2005, 2006 ஆம் ஆண்டுகளில் 484 நபர்களுக்கு விருது வழங்கல் |

### 3.1.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

2006 – 2012 வரையான காலப்பகுதியில் தேசிய ஆராய்ச்சி சபையின் 206 ஆராய்ச்சிகளுக்களாக ரூபா 702,000,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | வழங்கப்பட்ட தொகை | வழங்கப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | கைவிடப்பட்ட எண்ணிக்கை | வெற்றியடைந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட வெளியீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | | | | | |
| 2006 | - | 35 | 30 | 05 | 28 | 51 |
| 2007 | 150,000,000 | 14 | 10 | 04 | 08 | 09 |
| 2008 | - | 05 | 04 | - | 04 | 04 |
| 2009 | 72,000,000 | 24 | 09 | 02 | 03 | 08 |
| 2010 | 60,000,000 | 19 | 03 | 01 | 02 | 01 |
| 2011 | 200,000,000 | 51 | - | 03 | - | - |
| 2012 | 220,000,000 | 58 | - | - | - | - |
| | 702,000,000 | 206 | 56 | 15 | 45 | 73 |

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

i. 2006 இலிருந்து 2012 திசெம்பர் 31 வரை வழங்கப்பட்ட 206 ஆராய்ச்சிகளில் 56 அல்லது 27 சதவீதம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

ii. கைவிடப்பட்ட ஆராய்ச்சிகள் எண்ணிக்கை 15 ஆக இருந்ததுடன் அது 7 சதவீதம் ஆகும்.

iii. பூர்த்தி செய்யப்பட்ட 56 ஆராய்ச்சிகளில் இறுதி அறிக்கைகளுடனான வெளியீடுகள் (publication) 45 ஆராய்ச்சிகளுக்காக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

iv. பூர்த்தி செய்யப்பட்ட 56 ஆராய்ச்சிகளுக்கிடையில் வெற்றிகரமான ஆராய்ச்சியாக 45 மாத்திரமே இனங்காணப்பட்டிருந்தன.

v. ஆராய்ச்சிகளின் இறுதி விளைவுகள் ஆராய்ச்சி வெளியீடுகளுக்கு மட்டுப்படுத்தப்படுவதும் பதிப்புரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையும் காரணமாக ஆராய்ச்சிகளுக்காக வழங்கப்பட்ட பணத்திற்கு உரிய பெறுமதி கிடைக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகிள்றன.

(அ) 1999 - 2006 ஆம் காலப்பகுதியினுள் வழங்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 127,354,214 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை அந்த நிறுவனங்களுக்கு கையளிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் நிதிக்கூற்றுக்களில் ஆராய்ச்சி சபையின் நிலையான சொத்தாக காண்பிக்கப்பட்டிருந்தது. சில சொத்துக்கள் பூரணமாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு முடிவடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டில் இச் சொத்துக்களுக்குரிய பெறுமானத் தேய்வின் அளவு ரூபா 11,410,417 ஆக இருந்தது.

(ஆ) கீழே குறிப்பிடப்படுகின்ற செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய கால எல்லை முடிவடைந்தமையினால் வங்கிக் கணக்கும் மூடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆராய்ச்சி பூர்த்தி செய்யப்பட்டு இறுதி அறிக்கை 2013 மே வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| செயற்திட்ட இலக்கம் | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி | செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட வேண்டிய திகதி | செயற்திட்ட வழங்கலின் பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 06-22 | 2008.04.01 | 2011.09.30 | 2,299,611 |
| 07-39 | 2009.04.30 | 2012.04.29 | 4,250,000 |
| 08-29 | 2009.12.01 | 2012.12.20 | 705,321 |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகிள்றன.

(அ) ரூபா 32,859,458 தொகையான ஆராய்ச்சி மானியத்தைப் பெற்றுக் கொண்ட 16 ஆராய்ச்சியாளர்கள் தமது ஆராய்ச்சி செயற்திட்டங்களை கைவிட்ட காரணத்தினால் அதற்காக வழங்கப்பட்ட பணம் 1 - 4 வருட காலமாக வங்கி நடைமுறைக் கணக்கில் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் இச் செயற்திட்டங்களைக் கைவிட்ட ஆராய்ச்சியாளர்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999 / 2000 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஆராய்ச்சி மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 20,890,325 தொகையான ஆராய்ச்சி உபகரணங்கள், ஏனைய ஆராய்ச்சி மானியங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் பொருட் பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை.

## 3.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பின்வரும் ஆராய்ச்சி மாணியங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் நீண்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

| மானிய இலக்கம் | உபகரணங்களின் பெறுமதி | செயற்பாடற்றுக் காணப்பட்ட தொகை | செயற்பாடற்றிருந்த காலம் | ஏனைய செயற்திட்டங்களுக்கு மாற்றுதல் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | ரூபா |
| 05-19 | 1,199,700 | 362,750 | 06 வருடம் | 836,950 |
| 05-56 | 1,677,641 | 1,677,641 | 06 வருடம் | - |
| 05-18 | 439,800 | 85,008 | 06 வருடம் | - |

(ஆ) மீளாய்வாண்டின் போது 58 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக ரூபா 215,615,052 தொகை நடைமுறைக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆராய்ச்சி செயற்பாடுகளிற்காக ரூபா 10,004,194 தொகை மாத்திரமே ஈடுபடுத்தப்பட்டிருந்தது. ஆராய்ச்சி மானியங்களுக்காக நிதி வழங்கும் தற்போதைய முறைமையினால் அரசாங்க நிதி பல வங்கிகளில் நீண்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. 04 ஆராய்ச்சியாளர்களுக்கு 2012 ஏப்ரல், யூலை மாதங்களில் வழங்கப்பட்ட ரூபா 16,818,386 பெறுமதியான ஆராய்ச்சி மானியம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் செயற்படுத்தப்படாமையினால் 2009 ஆம் ஆண்டின் போது உரிய நிறுவனத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 150,869 தொகை 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிட முடியாது காணப்பட்டது.

## 4. கணக்கணிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பணிப்பாளர் சபைக் கூட்டம்

மீளாய்வாண்டிற்காக 04 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. தேசிய ஆராய்ச்சி சபையின் பணிப்பாளர் சபை 15 அங்கத்தவர்களைக் கொண்டிருந்ததுடன் கூட்டத்திற்கான அங்கத்தவர்களின் பங்களிப்பு போதுமானதாக இருக்கவில்லை. அங்கத்தவர்களில் ஐந்து பேர் ஒரு கூட்டத்திலும் பங்குபற்றியிருக்கவில்லை.

### 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையினால் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைகளைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நோக்கத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள், செயற்பாடுகள் தெளிவாகக் காண்பிக்கப்பட்டிராததுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தை காலரீதியாக பரீட்சிப்பதற்காக ஒவ்வொரு காலாண்டிலும் அடையப்பட வேண்டிய பௌதீக இலக்குகள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் பாதீட்டின் பிரகாரம் வருடாந்த மொத்தச் செலவினம் ரூபா 253 மில்லியனாக இருந்த போதிலும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மொத்தச் செலவினம் ரூபா 231 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### 4.3 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபத்தின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் முறையான கணக்காய்வுக் குழு நியமிக்கப்பட்டிராததுடன் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களில் மூன்று பேரின் பங்குபற்றலுடன் மீளாய்வாண்டிற்காக 01 கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஆராய்ச்சி மானியம் வழங்கல்

(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு